**செய்தி வெளியீடு எண் : 2148** **நாள் : 29.11.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கான ரூ.83.82 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (29.11.2022) அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.30.26 கோடி செலவில் 51 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.1.56 கோடி மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 27,070 பயனாளிகளுக்கு ரூ.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**<u>இன்றைய தினம் அரியலூரில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:</u>**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஆதனக்குறிச்சி, குருவாடி, கோவிலூர், எரக்குடி, பொய்யாதநல்லூர், அருங்கால், சுப்புராயபுரம், கருப்பிலாக்கட்டளை, கீழநத்தம், இலையூர் மற்றும் காட்டாத்தூர் ஆகிய இடங்களில் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 11 துணை சுகாதார நிலையக் கட்டடங்கள், அங்கனூர், குமிழியம், குருவாடி, மணக்கால், பொய்யாதநல்லூர், பொய்யூர், தா.பழூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 செவிலியர் குடியிருப்புகள், 61 இலட்சம் ரூபாய் செலவில் அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள நீராவி சலவையகக் கட்டடம், தா. பழூர் மற்றும் இடையக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 புறநோயாளிகள் சிகிச்சை பிரிவுக் கட்டடங்கள், ஜெயங்கொண்டத்தில் 18 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவுக் கட்டடம்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ஆர்.எஸ். மாத்தூரில் 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடம், உடையார்பாளையத்தில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடைப்பராமரிப்பு மற்றும் மருந்துப்பணிகள் துறை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம்;

கூட்டுறவுத் துறை சார்பில் பொன்பரப்பி, பரணம், புதுப்பாளையம், பொய்யூர், முத்துசேர்வாமடம், உதயநத்தம், ஸ்ரீபுரந்தான் மற்றும் ஆண்டிமடம் ஆகிய இடங்களில் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கான 8 அலுவலகக் கட்டடங்கள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் ஆண்டிமடத்தில் 23 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம், திருமானூரில் 17 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குறுவட்ட நிலஅளவையர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கருப்பிளாக்கட்டளை, தத்தனூர் மேலூர், பிள்ளைப்பாளையம் மற்றும் தென்கச்சி பெருமாள் நத்தம் ஆகிய இடங்களில் 36 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள், நமங்குணம், துளார், எருத்துக்காரன்பட்டி, உடையார்பாளையம் மற்றும் சின்னவளையம் ஆகிய இடங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் 25 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 சமையற் கூடங்கள், குமிழியம், ஆதனக்குறிச்சி, இலந்தைக்கூடம் மற்றும் குருவாலப்பர் கோவில் ஆகிய இடங்களில் 84 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், கீழநத்தத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிராம நியாயவிலைக் கட்டடம், பருக்கல்லில் 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரங்க மேடை கட்டடம், இருகையூர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடம்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் உடையார்பாளையத்தில் 42 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய பூங்கா

**என மொத்தம் 30 கோடியே 26 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 51 முடிவுற்ற திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**மேலும், இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரங்கள்:**

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அரியலூர் வட்டம், மேலப்பழுவூர் மற்றும் இலந்தைகூடம் ஆகிய இடங்களில் தலா 48 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் அரியலூரில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர் மாவட்ட வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பெட்ரோல் பங்க்;

**என மொத்தம் 1 கோடியே 56 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**இவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதன் விவரங்கள்:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 5,289 பயனாளிகளுக்கு ரூ.7.66 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 1,576 பயனாளிகளுக்கு ரூ.12.03 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 1,300 பயனாளிகளுக்கு ரூ.19.16 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 297 பயனாளிகளுக்கு ரூ.14.68 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 176 பயனாளிகளுக்கு ரூ.16.10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் 58 பயனாளிகளுக்கு ரூ.26.79 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 9,000 பயனாளிகளுக்கு ரூ.3.25 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் 41 பயனாளிகளுக்கு ரூ.1.64 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் சார்பில் 113 பயனாளிகளுக்கு ரூ.12.27 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.1.62 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை 3,524 பயனாளிகளுக்கு ரூ.3.83 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.68 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் சார்பில் 5,611 பயனாளிகளுக்கு ரூ.2.97 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தாட்கோ திட்டத்தின்கீழ் 50 பயனாளிகளுக்கு ரூ.53.18 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.20 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவி, மாவட்ட தொழில் மையம் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.11.37 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் 7 பயனாளிகளுக்கு ரூ.11.68 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

**என மொத்தம் 27,070 பயனாளிகளுக்கு ரூ.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஆ. ராசா, திரு. தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே. சின்னப்பா, திரு.க.சொ.க. கண்ணன்,

திரு. எம். பிரபாகரன், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பெ. ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

...............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in